**கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலே பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலே பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கண்டி கடவத்சதர மற்றும் கங்கவட கோராலே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,013,054 ஆன கனணி உதிரிப் பாகங்கள், CCTV கெமரா தொகுதி மற்றும் ஏனை நானாவித உபகரணங்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். | சரியாக கணக்கீடு செய்ய வேண்டியமை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 1,550,063 ஆன நீதிமன்ற தண்டப்பணம் வருமானமொன்றாக இனங்கண்டிருக்கவில்லை. | சுட்டிக் காட்டிய தவறை ஏற்றுக் கொள்வதாக அறவிக்கிறேன். | |
| (இ) | பண்டக கணிப்பீட்டின் மூலம் அகற்றப்பட்ட 20 உருப்படிகள் குறித்த சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்றப்டவில்லை. | கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கிறேன். | |
| (ஈ) | கடந்த ஆண்டில், ரூபா 2,097,710 மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 6,767,422 ஆன காணி மேன்பாட்டிற்காக மற்றும் கட்டிட நிர்மாணத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 8,865,132 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு வைக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | |
| (உ) | வீதவரி வருமான முகாமை மென்பொருளை கொள்வனவு செய்ய செலவிடப்பட்ட ரூபா 180,000 தொகை | கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக | |

கற்புலனாகா சொத்தாக மூலதனமாக்கியிருக்கவில்லை. அறிவிக்கிறேன்.

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| கணக்கு விடயங்கள் 02 இற்குரிய நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் நேரொத்த அறிக்கைகள் பிரகார மீதிக்கிடையில் ரூபா 31,778,022 ஆன இணக்கமின்மை நிலவியது. | சொத்துக்கள் கணிப்பீட்டை முடிவு செய்துள்ளதுடன், பதிவேடுகளை சரியாக நாலாதுவரை ஆக்குவதாக அறிவிக்கிறேன். | அடட்வணை மற்றும் நேரொத்த அறிக்கைகளை சரி செய்ய வேண்டியமை |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சொத்துப் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால், கூட்டுத் தொகை ரூபா 26,404,497 ஆன 08 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது, திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியாதிருந்தன. | எதிர்காலத்தில் சரியாக பதிவேடுகளை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். | சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டியமை |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 35,113,686 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 30,704,703 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய ரூபா 7,931,477 ஆன வீதவரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் மீது வரிப் பணம் அதிகரித்தமை மற்றும் கொரோனா தொற்று நிலைமையின் கீழ் அறவீடு கடினமானதாக அறிவிக்கிறேன். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டியமை |
| (ஆ) | நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 37,185,145 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்படவில்லை. | எதிர்காலத்தில் பணம் அறவிடுவதாக அறிவிக்கிறேன். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டியமை |

**2.3 மிகை அறவீடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| பிரதேச சபை சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் பொறுப்புவாந்தவர்களுக்கு எதிராக என்னால் மீளாய்வாண்டினுள் ரூபா 262,608 பெறுமதியான மிகை அறவீடு விதிக்கப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக எடுக்க வேண்டிய முன்நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | தொடர்புடைய தரப்பினருக்கு அறிவித்து அனுப்பிய போதும், இது வரை செலுத்தவில்லை என அறிவிக்கிறேன். | மிகைக் கட்டண சான்றிதழ் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தாய்லாந்து வெளிநாட்டுப் பயணம் | | |
| | வெளிநாட்டு பயிற்சியொன்றிற்கு 05 மக்கள் பிரதிநிதிகளை பங்குபற்றச் செய்ய ரூபா 800,000 பிரயாண முகவர் நிறுவனமொன்றிற்கு 2019 ஆகஸ்ட் 23 திகதி கொடுப்பனவு செய்திருந்த போதும், உள்ளூராட்சி ஆணையாளரின் 2018/11 சுற்றறிக்கை பிரகாரம், முறையாக விடுமுறை அங்கீகரிக்கப்படாததால், குறித்த பயிற்சிக்கு பங்குபற்றி இருக்கவில்லை. | முறையாக விடுமுறை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லையென மற்றும் செலுத்திய பணத்தை அறவிடுவதாக அறிவிக்கிறேன். | கொடுப்பனவு செய்ய முன்னர் குறித்த பிரமாணங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டியமை |
| (ஆ) | 05 ஆண்டு காலமொன்றை விஞ்சி அறவிடப்படாத ரூபா 15,565,731 ஆன நானாவித கடன்படுனர் மீதி மற்றும் ரூபா 59,950 ஆன குப்பை வரி மீதியை அறவிட மற்றும் ரூபா 2,874,398 ஆன வேலை மற்றும் பொது வசதிகள் கடன்கொடுனர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிட, பதிவலிக்க மற்றும் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | அறவீடு மற்றும் கொடுப்பனவு தீர்க்கப்பட வேண்டியமை |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 1986 மார்ச் மாதம் 10 திகதி இலக்கம் 392/9 கொண்ட அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்ட 1986 நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிட்ட கட்டிட கட்டளைகளின் 22 ஆம் கட்டளையை அகற்றி, அதற்கு பதிலாக 1996 ஆகஸ்ட் 06 திகதிய இலக்கம் 935/6 கொண்ட அதிவிஷேட வர்தமானியில் வெளியிடப்பட்ட 22(1) கட்டளை பிரகாரம், அதிகார எல்லையில் காணி உப பிரிப்பின் கீழ் 1993 ஆண்டிலிருந்து 2016 ஆண்டு வரையான காலத்தினுள் சபைக்கு கிடைத்துள்ள 20 காணித் துண்டுகளின் 06 ஏக்கர் 29 பர்சஸ் மக்களின் பொது தேவைகளிற்கு பயன்படுத்தி இருக்காததுடன், 07 காணித் துண்டுகளின் 206.09 பர்சஸ் அளவொன்றிற்கு முறையான உருதி பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் வேலி எல்லைகளை இனங்கண்டு, மதிப்பீடு தயாரித்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | உப பிரிப்பின் கீழ் கிடைத்த காணி பயன்படுத்தப்பட வேண்டியமை |

## 3.3 ஒப்பந்த நிருவகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் மெத்தேபதன மயானத்தில் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் வேலைக்குரிய மதிப்பீட்டின் பிரகாரம், மேற்கொள்ளப்படாத செயற்பாடுகளிற்காக சபை செயலாளரின் பரிந்துரை மற்றும் தவிசாளரின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 27,117 ஒப்பந்தக்காரரிற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படாத வேலைகளிற்கான கொடுப்பனவை தடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். | மேற்கொள்ளப்பட்ட வேலைகளிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய வேண்டாமை |